பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பார்கள். அந்த அம்மையாருக்கு நீங்கள் எல்லாம் தெரிவித்த இரங்கல் கருத்துக்களோடு எனது இரங்கல் கருத்துக்களையும், அவை முன்னவர் முன்மொழிந்த இரங்கல் தீர்மானத்தோடு இணைத்துக் கொள்கிறேன்.

பேரவை முன்னவர் கொண்டுவந்த தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம், தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சஞ்சய் காந்தி அவர்களது மறைவுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் ஒத்திவைக்கப்பெறுகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9-00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை காலை 11-16 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

1. 1972 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1 ஆம் நாளிலிருந்து 1975 ஆம் ஆண்டு மே திங்கள் 31 ஆம் நாள் வரை நடந்த அத்துமீறல்கள் குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பெற்ற மாண்புமிகு நீதிபதி திரு. W. S கிருஷ்ணசாமி நாயுடு விசாரணைக் கமிஷனின் இடைக்கால அறிக்கையின் நான்காம் பகுதி (தமிழ்) [1952 ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

2. 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24 ஆம் நாளன்று திருப்பரங்குன்றம் காவல் நிலையத்தில் நடைபெற்ற சம்பவத்தைக் குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பெற்ற மாண்புமிகு நீதிபதி சி. ஜே. ஆர். பால் கமிஷன் அறிக்கை (தமிழ்) [1952 ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்திய சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.